People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
## 17.05.2009 முதல் 31.05.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 283. | 17.05.09 | **தருமபுரி மாவட்டம்:** பாலக்கோடு அருகே பக்கனஅள்ளி சிற்றூரைச் சேர்ந்த சித்தன் மனைவி லிங்கம்மாலின் சொந்தமான தோட்டத்தில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது பற்றி போலீசார் விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 284. | 17.05.09 | **தேனி மாவட்டம்:** அல்லிநகரத்தை சேர்ந்த செல்வராஜ் மனைவி ராதா. இருவருக்கும் திருமணம் முடிந்து சில நாட்கள் ஆன நிலையில் செல்வராஜ் வீரபாண்டியை சேர்ந்த மாரியம்மாளுக்கும் இடையே கள்ளத்தொடர்பு இருந்து வந்த நிலையில் இருவரும் தனியாக குடும்பம் நடத்தி வந்தனர். செல்வராஜ் ராதாவை வீட்டிற்கு வராத நிலையில் மாரியம்மாள் கோவில் திருவிழாவிற்கு வந்த போது ராதா மற்றும் பல பெண்கள் இணைந்து மாரியம்மாளை சிறை பிடித்தனர். இது பற்றி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 285. | 18.05.09 | **மதுரை மாவட்டம்:** நாகனகுளத்தைச் சேர்ந்த ராசு மகன் பழனி 2006ம் ஆண்டு நடந்த காவலர் தேர்வுக்கு விண்ணப்பிருந்தார். அப்பொழுது அவரிடம் வேலை வாங்கி தருவதாக கூறி அவனியாபுரத்தை சேர்ந்த போலீஸ் ஏட்டு ஜெயராமன் ரூ. 70 ஆயிரம் கேட்டுள்ளார். இதில் பழனி ரூ. 35 ஆயிரம் பணம் கொடுத்துள்ளார். இந்நிலையில் இதுவரை வேலை கிடைக்காததால் பழனி பலமுறை பணம் கேட்டும் தராததால் பழனி கோர்டில் மனு. | காவலர் வன்முறை | தினத்தந்தி |
| 286. | 18.05.09 | **சிவகங்கை மாவட்டம்:** செங்குளத்தை சேர்ந்த சாலமன் வயிற்றுவலியால் சிவங்கதை அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவில் சேர்ந்தார். அங்கு 2 மருத்துவர்கள் மட்டுமே உள்ள நிலையில் உள் நோயாளிகளை பார்த்த பிறகே வெளி நோயாளிகளை பார்க்க முடியும் என்று கூறி அதுமட்டுமில்லாமல் புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியாது என்று கூறியுள்ளார். இதனால் சாலமன் உறவினர்கள் மருத்துவமனையில் முற்றுகை போராட்டம் நடத்தினர் | மருத்துவர்கள் அலட்சியம் | தமிழ்சுடர் |
| 287. | 18.05.09 | **தேனி மாவட்டம்:** உத்தமபாளையத்தைச் சேர்ந்த கவுசல்யா மதுரை சட்டக்கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வந்தார். இவர் தல்லாகுளத்தில் உள்ள பெண்கள் விடுதியில் தங்கி படித்து வருகிறார். இவருக்கும் | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தமபாளையத்தைச் சேர்ந்த அரவிந்தனுக்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்று திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த வேலையில் திருமணம் தடைப்பட்டது. இந்நிலையில் அரவிந்தனுக்கு வெறு ஒரு பெண்ணுடன் திருமணம் நடைபெற்ற போது கவுல்சயா கேலி கிண்டல் செய்துள்ளார். இதனால் அரவிந்தன் கையைப் பிடித்து இழுத்து கன்னத்தில் அறைந்துள்ளார். இது பற்றி கவுசல்யா போலீசில் புகார். | | |
| **288.** | **18.05.09** | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் திருநகரை அடுத்த ஜோசப்நகரைச் சேர்ந்த பிரபாகரன் மனைவி குறிஞ்சிநாயகி குடும்பத் தகராறு காரணமாக தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்டார். இதையடுத்து அவரது உறவினர்கள் போலீசுக்கு தெரிவிக்காமல் சடலத்தை எரிக்க முயன்றனர். இதையறிந்த வி.ஏ.ஓ சடலம் பாதி எரிந்த நிலையில் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| **289.** | **18.05.09** | **கன்னியாகுமரி மாவட்டம்:** களியங்கா–விளை காவல் ஆய்வாளர் சக்திவேல் தலைமையிலான காவலர்கள் அங்குள்ள் பேருந்து நிலையம் அருகே நள்ளிரவு வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது குமரி மாவட்டத்தில் மணல் இறக்க இலவச சீட்டு வைத்துக் கொண்டு கேரளத்திற்கு மணல் கடத்த முயன்றது தெரியவந்து லாரிகளை பறிமுதல் செய்தனர். | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |
| **290.** | **18.05.09** | **சென்னை மாவட்டம்:** மடிப்பாக்கத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் மனைவி இந்திரா. இருவருக்கும் திருமணம் ஆகி இரண்டரை ஆண்டுகள் ஆகி குழந்தைகள் இல்லாத நிலையில் உள்ளனர். வேலூருக்கு சென்ற பொழுது அங்கு தங்கியிருந்த விடுதியில் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டனர். இது பற்றி போலீசார் விசாரணை செய்ததில் கடன் தொல்லை என தெரியவந்துள்ளது. | கடன் தொல்லை | தமிழ்ஓசை |
| **291.** | **18.05.09** | **திருப்பூர் மாவட்டம்:** அருமாரம்பாளையம் பகுதியைச் சேர்ந்த 19 வயது பெண்ணை அப்பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் காதலித்து வந்தார். அடிக்கடி அப்பகுதியில் உள்ள முள்காட்டில் இருவரும் சந்திப்பது வழக்கம். இதை பயன்படுத்தி கொண்ட அப்பகுதி இளைஞர்கள் சதீஸ்குமார், முருகேசு, ரஞ்சித்குமார் ஆகியோர் மிரட்டி அப்பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| **292.** | **18.05.09** | **நாகப்பட்டினம் மாவட்டம்:** மணல்மேடு அருகே உள்ள விட்டாரமாரி சிற்றூரைச் சேர்ந்த காந்திநாதன் மனைவி செல்வராணி திருமணம் | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆகி 6 ஆண்டுகளே ஆன நிலையில் காந்திநாதன் உரக்கடை வைக்க பணம் வாங்கி வரும்படி நாள்தோறும் கொடுமைப்படுத்தி உள்ளார். மனமுடைந்த செல்வராணி தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து செல்வராணியின் தாய் தனலெட்சுமி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| **293.** | **18.05.09** | **அரியலூர் மாவட்டம்:** தாமரைக்குளம் சிற்றூரைச் சேர்ந்த ஏழுமலை மனைவி இராமாயி வீட்டின் தனியாக இருந்த போது உடல் கருகிய நிலையில் வீட்டில் இறந்து கிடந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செயது நகைக்காக கொலை செய்யப்பட்டாரா? என விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| **294.** | **18.05.09** | **தேனி மாவட்டம்:** உத்தமபாளையம் தண்ணீர் தொட்டி தெருவைச் சேர்ந்த ஆரோக்கியராஜ் மனைவி ஆரோக்கியமேரி. ஆரோக்கியராஜ் தமிழ்நாடு வாணிப கிடங்களில் லோடுமேனாக உள்ளார்.கடந்த ஆண்டு நடந்த விபத்தில் உடல்நிலை பாதித்தது. இதனால் குடும்பம் நடத்த வருமானம் போதாமல் கணவன் மனைவி இருவரும் தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்டனர். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | கடன் தொல்லை | தினகரன் |
| **295.** | **18.05.09** | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே உள்ள குப்பணாபுரத்தைச் சேர்ந்த ராமையா மனைவி ஸ்ரீரங்கம். ஸ்ரீரங்கத்திற்கு அவரது மகன்கள் குருவையாவுக்கும், பாலனுக்கும் இடையே குடும்பத் தகராறு இருந்து வந்தது. இந்நிலையில் சம்பவத்தன்று ஏற்பட்ட தகராறில் ஸ்ரீரங்கத்தை மகன்கள் தாக்கியுள்ளனர். இதில் காயமடைந்த ஸ்ரீரங்கம் மருத்துவமனையில் அனுமதி. போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| **296.** | **19.05.09** | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள கட்டுக்குளத்தைச் சேர்ந்த மனேகாரன் அப்பகுதியில் உள்ள பக்கிரிசாமியின் மகள் பேச்சியம்மாளிடம் சில்மிஷம் செய்துள்ளார். இந்நிலையில் இது பற்றி பேச்சியம்மாள் தனது +2 முடித்த சகோதரியிடம் கூறியுள்ளார். இது மணிகண்டன் மனோகரன் தூங்கி கொண்டிருந்த போது தலையில் கல்லை போட்டு கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| **297.** | **19.05.09** | **இராமநாதபுரம் மாவட்டம்:** திருவில்லிப்–புத்தூர் அருகே சித்தாலம்புத்தூராரைச் சேர்ந்த பெருமாள் மனைவி மணிமேகலை ஆண்டாள். மே 18ம் தேதி ஏற்பட்ட குடும்ப பிரச்சனையில் | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனமுடைந்த மணிமேகலை தனது குழந்தைகளுடன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 298. | 19.05.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** கும்பகோணம் அருகில் உள்ள பட்டிஸ்வரம் பகுதியைச் சேர்ந்த கணேசன் மகன் ஜனனி (16) ஜனனி பட்டிஸ்வரத்தில் உள்ள அரசு பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார். ஜனனி +2 தேர்வில் 1000ம் மதிப்பெண்களுக்கு மேல் பெறுவேன் என்று கூறி வந்தார். இந்நிலையில் 871 மதிப்பெண்கள் மட்டுமே எடுத்ததால் மனமுடைந்த ஜனனி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தீகுளித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | | தமிழ்ஓசை |
| 299. | 19.05.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** குடிமைப் பொருள் வட்டாட்சியர் மோகன் வருவாய் ஆய்வாளர் சுகுமார் ஆகியோர் காஞ்சிபுரம் அடுத்த குமாரபாளையம் சிற்றூரில் கம்மவார்பாளையம் பந்தூர் சாலையில் திடீர் ஆய்வு நடத்தியதில் புதருக்குள் 8 மூட்டை ரேசன் அரிசி கடத்தவிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. | ரேசன் அரிசி கடத்தல். | தமிழ்ஓசை |
| 300. | 19.05.09 | **மதுரை மாவட்டம்:** காடுபட்டி போலீஸ் சரகத்திற்குட்பட்ட கச்சிராயிருப்பு பகுதியைச் சேர்ந்த முனியாண்டி மகள் சோனியா. +2 முடித்து மேல் படிப்புக்கான சோனியா முயற்சி செய்த கொண்டிருந்த பொழுது அப்பகுதியைச் சேர்ந்த ஆனந்தன் முன் விரோதம் காரணமாக காரில் கடத்தி சென்று விட்டார். இது பற்றி முனியாண்டி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 301. | 19.05.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** இராயந்தூர் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதி சித்தாயல் கிராம தலித் மக்கள். சித்தாயல் கிராமத்தில் அரசுக்கு சொந்தமான குளங்களில் மீன் பிடிக்க தாழ்த்தப்பட்டவர்களை அதிக்க சாதியினர் அனுமதிக்க மறுத்து விட்டனர். இதனால் இரு சமூகத்தனரிடம் மீன் பிடிக்க உரிமையாருக்கு என்பது தொடர்பாக பிரச்சனைகள் எழும் நிலை. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 302. | 20.05.09 | **மதுரை மாவட்டம்:** ஜெய்ஹிந்த்புரம் ஜீவா நகர் முதல் தெருவைச் சேர்ந்த கஜினாபேகத்தை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 303. | 20.05.09 | **மதுரை மாவட்டம்:** அரசு மருத்துவமனை துப்புரவு பணியாளர் நாகராஜ் இவர்கடந்த 4 மாதங்களுக்கு முன் இறந்து போன ஒருவரின் | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சடலத்தை பிணவறைக்கு கொண்டு செல்ல மாமூல் கேட்டுள்ளார். இது குறித்து புகார். | | |
| 304. | 20.05.09 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை தாலுகா, வீரவசர் ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப்பள்ளி மாணவ, மாணவிகள் மாற்றுச் சான்றிதழ்களை எரித்துள்ளார் அப்பள்ளி தலைமை ஆசிரியர் மு. சரோஜாதேவி. மேலும் கல்வி பணத்தை சரிவர கையாளவில்லை. சத்துணவில் தரப்படும் முட்டைகளை சரிவர வழங்கவில்லை என அவ்வூர் மக்கள் கலெக்டரிடம் மனு. | வகுப்பறை வன்முறை | தமிழ்சுடர் |
| 305. | 20.05.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** அண்ணாநகர் 9வது தெருவைச் சேர்ந்த சந்தனகுமார் மனைவி ஆனந்தஜோதி. இருவருக்கும் கடந்த ஏப்ரல் மாதம் 30ம் தேதி திருமணம் நடைபெற்றுள்ள நிலையில் மேலும் வரதட்சணையாக பணம், நகையை கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். இந்நிலையில் மாமியார், பிராட்சி ஆனந்தஜோதியை கொடுமைப்படுத்தியுள்ளார். இதனால் மனமுடைந்த ஆனந்தஜோதி தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 306. | 20.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** பாளையங்–கோட்டை அம்மை அருகே உள்ள கோவில்குளத்தைச் சேர்ந்த மூக்காண்டி மனைவி ஆனந்தி. பாளையங்கோட்டையில் அரசு மருத்துவமனையில் பிறந்து 48 மணி நேரம் ஆன பெண் குழந்தையை மருத்துவமனையில் விட்டு சென்றுள்ளனர். | பெண் சிசு | |
| 307. | 20.05.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** மாவட்ட தொழிலாளர் நலத்துறை அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர்ரெய்டு நடத்தினர். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 308. | 21.05.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் பகுதி நெடுஞ்சாலை ரோந்து போலீசார் லஞ்சம் வாங்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 309. | 21.05.09 | **சென்னை மாவட்டம்:** எழிலகத்தில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சோதனையிட்ட போது ரூ. 49 ஆயிரம் கைப்பற்றப்பட்டது. இது குறித்து போலீசார் விசாரணை. | லஞ்சம் | தினமலர் |
| 310. | 21.05.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** முருகன் தீண்டாமை வன்கொடுமை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 2007 ஜூலை 16ம் தேதி மதுரை சிறையில் அடைக்கப்பட்டார். திடீரென சிறையில் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | சிறை கைதி மரணம். | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 311. | 21.05.09 | **திருவாரூர் மாவட்டம்:** வலங்கைமான் அருகே உள்ள சித்தன் வாபூர் அக்ரஹாரம் தெருவைச் சேர்ந்த சின்னையன் மகன் பாரதி (எ) குருமூர்த்தி மனைவி மாரிஸ்வரி. இருவரும் காதலித்து பெற்றோர் எதிர்ப்பை மீறி 13.03.09 அன்று திருமணம் செய்து கொண்டனர். இந்நிலையில் மாரிஸ்வரியை அவரது கணவர் கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 312. | 21.05.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** விளாத்திக்குளம் அடுத்த வேடப்பட்டியைச் சேர்ந்த யாக்கோபு மனைவி மூக்கம்மாள். கூலித் தொழிலாளியான யாக்கோபு உடல் நலக்குறைவால் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்தார். இதனால் குடும்படம் நடத்த முடியாமல் வறுமையில் வாடிய மூக்கம்மாள் கணவரை வேலைக்கு செல்லுமாறு வற்புறுத்தியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த யாக்கோபு மாரியம்மாளை அரிவாளால் வெட்டியுள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 313. | 21.05.09 | **திருவள்ளூர் மாவட்டம்:** ஊத்துக்கோட்டை அடுத்த புதுச்சேரி சிற்றூரைச் சேர்ந்த உமா மகேஸ்வரியை அப்பகுதியைச் சேர்ந்த 4 இளைஞர்கள் கேலி செய்துள்ளனர். இதை உமா மகேஸ்வரி தாத்தா ஈஸ்வரன் தட்டி கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த வாலிபர்கள் தாத்தாவை தாக்கியுள்ளனர். இதை தடுக்க வந்த உமாமகேஸ்வரியை இழிவான வார்த்தைகளால் திட்டியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 314. | 21.05.09 | **மதுரை மாவட்டம்:** கள்ளிக்குடி அருகே உள்ள சென்னம்பட்டியை சேர்ந்த சசிக்குமார் மனைவி தீபா. இவர்களுக்கு 3 குழந்தைகள் உள்ள நிலையில் தீபா திடீரென காணாமல் போய் விட்டார். இவரை அதே ஊரைச் சேர்ந்த மகாலிங்கம் கடத்தி சென்று விட்டதாக புகார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 315. | 21.05.09 | **சென்னை மாவட்டம்:** ஆவடி பகுதியில் வாழும் இப்ராஹீம். மே 17ம் தேதி அன்று இரவு காவல்துறையினர் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இடித்துச் சென்றுள்ளனர். மேலும் ஏன் இடித்து செல்கின்றீர்கள் என கேட்ட பெண்களை அவதூறாக பேசியுள்ளார். இது பற்றி 19ம் தேதி தௌஹீத் ஜாமாத் மூலம் ஆர்பாட்டம் நடத்தியுள்ளனர். | காவல் நிலையச் சித்ரவதை. | ஜனசக்தி |
| 316. | 21.05.09 | **மதுரை மாவட்டம்:** சாமநத்தம், புலியூரைச் சேர்ந்த கிருஷ்ணசாமி மகள் சுகன்யா (16) 16 வயதுடைய சுகன்யாவை அப்பகுதியைச் சேர்ந்த | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஜோபிராஜ் காதலிப்பதாகக் கூறி திருமணம் செய்து கொண்டார். தற்பொழுது 2 மாத கர்ப்பினியாக இருக்கும் சுகன்யாவை அடித்து விரட்டிவிட்டு 2வது திருமணம் செய்து கொண்டுள்ளார். இது பற்றி கிருஷ்ணசாமி போலீசில் புகார். | | |
| 317. | 21.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** பென்னாகரம் அருகேயுள்ள சீலநாயக்கன்பட்டியை சேர்ந்த சுந்தரேசன் மனைவி சின்னப்பாப்பா. இவர்களுக்கு ஏற்கனவே 2 பெண் குழந்தைகள் உள்ள நிலையில் தற்பொழுது 3வது பெண் குழந்தை பிறந்துள்ளது. இதனால் 3வது குழந்தையை வளர்க்க முடியாததால் அரசு தொட்டில் குழந்தை திட்டத்தில் சேர்ப்பு. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 318. | 21.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** பாலக்கோடு அருகே உள்ள புலியூரைச் சேர்ந்த பழனி மனைவி சகுந்தலா தம்பதியினருக்கு ஏற்கனவே 2 பெண் குழந்தைகள் உள்ள நிலையில் 3வது பிறந்த பெண் குழந்தையை அரசு தொட்டில் குழந்தை திட்டத்தில் சேர்ப்பு. | பெண் சிசு | தீக்கதிர் |
| 319. | 21.05.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் மதுகுடியிருப்பு பகுதியைச் சேர்ந்த டோரதி சாம்சன் மகள் அஸ்மாவை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் அதிக வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்வதாக அஸ்மா போலிசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. வரதட்சணைக் கொடுமை. | தமிழ்ஓசை |
| 320. | 21.05.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** அமுதாநகர் 5 வது தெருவைச் சேர்ந்த கனகராசு மனைவி இன்னாசியம்மாள். கனகராசு குடிபோதை உடையவர். தினமும் குடிபோதையில் மனைவியுடன் தகராறு செய்வது வழக்கமாக கொண்டவர். இந்நிலையில் சம்பவத்தன்று குடிபோதையில் வந்தார். மனைவியுடன் தகராறில் செய்துள்ளார். இதனால் மனமுடைந்த இன்னாசியம்மாள் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசில் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |
| 321. | 22.05.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள மேலவளவு போலீஸ் சரகத்தை சேர்ந்த சேக்பெட்டி சுரேஷ்குமார் மனைவி கவிதா. திருமணம் ஆன 40 நாட்களிலே சுரேஷ்குமார் வேறு ஒரு பெண்ணை காதலித்து அப்பெண்ணும் வீட்டை விட்டு சென்றுள்ளார். இது பற்றி கவிதா போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினத்தந்தி |
| 322. | 22.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** சிவகிரி தாலுகா, தென்மலையைச் சேர்ந்த பெண் தனியார் ஆலையில் வேலை பார்க்கும் பெண்ணிடம் | பெண்கள் மீதான வன்முறை. | கணேசன், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பஞ்சாயத்து தலைவர் பாலியல் பலாத்காரம் முயற்சி. | | |
| 323. | 22.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** தென்காசி சேர்ந்த ஆரியதோரி சேர்ந்த முருகன் முத்து கிருஷ்ணன் என்பவரை நீதிபதி அனுப்பும் போதுவழியில் போலீசார் தாக்குதல். | காவல் நிலையச் சித்ரவதை. | கணேசன், RMA |
| 324. | 22.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** கோபால சமுத்திரத்தைச் சேர்ந்த மயிலி என்பவரை விசாரணை கைதியாக திருநெல்வேலி அரசு மருத்துவமனை உள் நோயாளிகள் சேர்க்கும் பொழுது உடலில் பிளேடால் கீறுவதாக மிரட்டல். | | கணேசன், RMA |
| 325. | 22.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** பாளையங்–கோட்டை தாலுகா மேலப்பாளையம் மாட்டுச் சந்தையில் கூடியிருந்த பொது மக்கள் மீது ஆய்வாளர் நாகராஜனை பொது மக்கள் மீது தாக்குதல். | காவல் நிலையச் சித்ரவதை. | கணேசன், RMA |
| 326. | 22.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** அம்பாசமுத்திரம் தாலுகா, சேரன்மகாதேவி யாஸ்மீன் பீ.வி கணவர் ஷாஜகானை வரதட்சணைக் கேட்டு கொடுமை. | பெண்கள் மீதான வன்முறை. வரதட்சணைக் கொடுமை. | கணேசன், RMA |
| 327. | 22.05.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** மில்லர்புரத்தைச் சேர்ந்த புருஷோத்தம் மகன் வினோத் பள்ளியில் மயங்கிய நிலையில் மர்மமான முறையில் இறப்பு. | வகுப்பறை வன்முறை | கணேசன், RMA |
| 328. | 22.05.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** திருச்செந்தூர் தாலுகா, குலசேகரன்பட்டிணம் சார்ந்த அன்சாரியை திருச்செந்தூர் காவல் நிலைய போலீசார் அடித்து சித்ரவதை. | காவல் நிலையச் சித்ரவதை. | கணேசன், RMA |
| 329. | 22.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** பாளையங்–கோட்டை சீவலப்பேரி பஞ்சாயத்து உறுப்பினர் தலித் சமூகத்தைச் சேர்ந்த செல்வம் என்பவரை காவல் துறையினர் தாக்கி பொய் வழக்கு. | | கணேசன், RMA |
| 330. | 22.05.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** அய்யம்பாளையம் வெள்ளியராவுத்தர் தெருவைச் சேர்ந்த டாக்டர் ஷேக் அப்துல்காதர் மனைவி நூர்ஜஹான். அப்துல்காதர் தங்கியிருக்கும் வீடு அவரது தங்கைக்கு சொந்தமானது என்பதால் அவரது சகோதரர்கள் வீட்டை காலி செய்யும்படி கூறியுள்ளனர். இந்நிலையில் நூர்ஜஹான் வீட்டில் தனியாக இருந்த பொழுது அப்துல்காதர் சகோதரர்கள் தகாத வார்த்தைகளால் திட்டி வீட்டை விட்டு வெளியேற்றி வீட்டை பூட்டி சென்றுள்ளனர். இது குறித்து போலீசில் புகார் கொடுத்தும் பயனில்லை. மேலும் போலீசார் நுழைய விடாமல் தொடர்ந்து தடுப்பதாக அப்துல்காதர் கோர்டில் மனு. தாக்கல் செய்துள்ளார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்ரவதை | கணேசன், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 331. | 22.05.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரத்தைச் சேர்ந்த பெரியார் நகரைச் சேர்ந்த மலைச்சாமி மனைவி கண்ணகி. திருமணமாகி 3 குழந்தைகள் உள்ள நிலையில் மலைச்சாமி அடிக்கடி பணம் கேட்டு கொடுமைப்படுத்தி உள்ளார். இந்நிலையில் கண்ணகி கோபித்துக் கொண்டு தனது பெற்றோர் வீட்டில் இருந்த பொழுது அங்கு வந்த மலைச்சாமி பணம் கேட்டுள்ளார். கண்ணகி பணம் தர மறுக்கவே 3 குழந்தைகளை அழைத்து சென்று விட்டார். இதனால் மனமுடைந்த கண்ணகி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்துவிசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |
| 332. | 22.05.09 | **மதுரை மாவட்டம்:** தபால்தந்தி நகரைச் சேர்ந்த முகமதுகாசிம் மனைவி நபிசாபேகத்தை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை. | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |
| 333. | 22.05.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** ஆரோக்கியபுரம் பெரியசாமி மனைவி மரியசிலுவை மனிஷாவுக்கும், பெரியசாமிக்கும் திருமணமாகி 38 நாட்கள் ஆன நிலையில் மனிசா தனிக் குடித்தனம் நடத்த பெரியசாமியை அழைத்துள்ளார். இதனால் மனமுடைந்த மனிஷா தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை. | தினமலர் |
| 334. | 22.05.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் ஹார்விபட்டியைச் சேர்ந்த துரைப்பாண்டி மனைவி சங்கரேஸ்வரியை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் அதிக வரதட்சணைக் கேட்டு சித்ரவதை. இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்சுடர் |
| 335. | 22.05.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் ரெங்கப்பநாயக்கன்பட்டி கிராம ஊராட்சியைச் சேர்ந்த சேர்வராயன்பட்டி கிராமமத்தில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இவர்களுக்கு ஒரே மயானம் உள்ள நிலையில் இந்த மயானத்திற்கு உள்ள பாதை நாளுக்கு நாள் ஆக்கிரமிப்பினால் போதிய பாதை வசதி இல்லாமலும் இறந்தவர்களின் உடலை கூட கொண்டு செல்ல முடியாமல் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டு உள்ளார்கள். எனவே மாவட்ட நிர்வாகம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து மயானத்திற்கு பாதை வசதி தருமாறு இப்பகுதி மக்கள் கேட்டு கொண்டு உள்ளனர். | மயானப் பிரச்சனை | தமிழ்சுடர் |
| 336. | 23.05.09 | **மதுரை மாவட்டம்:** பல்லைக்கழக நகரைச் சேர்ந்த ஆயிஷா அருண்மொழி கணவர் பொன்ரகு விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக உள்ளார். இவர் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளார். இதனை | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆயிஷா திட்டியுள்ளார். ஆனால் ஆயிஷாவை கத்தியைக் காட்டி மிரட்டி, ஒன்றறை லட்சம் ரூபாய் வாங்கி வருமாறு பொன்ரகு மிரட்டியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | | |
| **337.** | **23.05.09** | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம், திருநகர் அருகே உள்ள தேனி நகரைச் சேர்ந்த ஈஸ்வரன் மனைவி கார்த்தீஸ்வரி. இருவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுவதுண்டு. சம்பவத்தன்று ஏற்பட்ட பிரச்சனையில் கார்த்தீஸ்வரி மண்ணெணைய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |
| **338.** | **23.05.09** | **ஈரோடு மாவட்டம்:** கோபி வட்டம், வண்டியூர் பகுதியைச் சேர்ந்த தங்கவேல் மாரியப்பன், ரெங்கசாமி தங்கதுரை சத்தியராஜ் வடிவேல் இவர்களை கோவில காவல் நிலைய ஆய்வாளர் ஈஸ்வர் எஸ்.ஐ கோமதிநம்பிர் காவலர்கள் சக்திவேல், ஜகன், கருப்புசாமி, சி.ஏ.ஓவும் 15 பேர் சென்ற கும்பல் கடத்தி சென்று நம்பியூர் இடத்தில் பங்களாவில் வைத்து ஆடைகளை அவிழ்க்கச் செய்து அடித்து சித்ரவதை. | காவல் நிலையச் சித்ரவதை. | பெருமாள், RMA |
| **339.** | **23.05.09** | **நாகப்பட்டினம் மாவட்டம்:** வேளூர் அவ்வூரைச் சேர்ந்த போலீஸ்காரர் முருகதாஸ் பானுமதியிடம் ரூ. 10 ஆயிரம் கடன் பெற்றுள்ளார். இதனால் வட்டியுடன் தவனை முறையில் அசலை விட மூன்று மடங்கு அளவு பணத்தை கட்டியுள்ளார். இந்நிலையில் பானுமதி மேலும் வட்டிக்கட்ட வேண்டும் என்று கூறி சுப்ரமணி கடயை பூட்டி சாவியை எடுத்து சென்றுள்ளார். இது பற்றி பலமுறை காவல் நிலையத்தில் சுப்ரமணியன் புகார் கொடுத்தும் நடவடிக்கையில்லை. | கந்து வட்டி. | தீக்கதிர் |
| **340.** | **23.05.09** | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் டவுன் அல்லம்பட்டியில் ராமசாமி காம்பவுண்டில் வசித்து வரும் பாண்டி என்பவரின் 5 வயது பேத்தி வீட்டில் உறங்கி கொண்டிருக்கும் பொழுது அச்சிறுமியை சமூக விரோதிகள் பாலியல் பலாத்காரம் செய்து முட்புதறில் சிறுமியை வீசி சென்றுள்ளனர். அதே போல் அப்பகுதியில் 13 வயது சிறுமியை சமூக விரோதிகள் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்துள்ளனர். இது பற்றி மாதர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். | சிறுமி பாலியல் பலாத்காரம். | தீக்கதிர் |
| **341.** | **24.05.09** | **புதுச்சேரி மாநிலம்:** தட்சிணாமூர்த்தி மனைவி கம்சலாவுக்கு கடந்த ஆண்டு செப் மாதம் 8ம் தேதி ஆண் குழந்தை பிறந்தது. அரசு மருத்துவமனையில் பிறந்தது. அக்குழந்தை அடுத்த நாளிலே காணாமல் போனது. இந்நிலையில் அக்குழந்தை கடத்தி | சிசு கடத்தல் | தமிழ்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றொருவரிடம் விற்றுள்ளார் கடலூரைச் சேர்ந்த சாந்தி என்ற பெண். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 342. | 24.05.09 | **கோவை மாவட்டம்:** முன்னாள் காவல் கண்காணிப்பாளர் சுப்ரமணியன் பொது கூட்டத்தில் கள் இறக்க காவல் துறையினர் தடையை மீறுங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறியதால் சுப்ரமணியன் மீது வழக்கு பதிவு. | | தமிழ்ஓசை |
| 343. | 24.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** சங்கரன்கோவில் அருகே வெள்ளான்குளத்தைச் சேர்ந்த கருப்புசாமி மகன் கோபாலின் மாமனார் இறந்து காரியம் செய்யும் போது ஏற்பட்ட பிரச்சனையில் கோபாலனுக்கும் ஓய்வு பெற்ற தலைமைக் காவலர் கிருஷ்ணனுக்கும் முன் விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில் சம்பவத்தன்று கோபாலனை பாலகிருஷ்ணன் மற்றும் இரண்டு பேர் சேர்ந்து கத்தியால் குத்தியுள்ளனர். படுகாயம் அடைந்த கோபால் மருத்துவமனையில் அனுமதி. போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | காவல் நிலைய வன்முறை. | தமிழ்ஓசை |
| 344. | 24.05.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** மேலக்கோட்டை சேர்ந்த அல்லாப்பிச்சை மகள் நூருல்பவுசியா 8ம் வகுப்பு வரை படித்து விட்டு வீட்டில் இருந்தார். இந்நிலையில் கடந்த 10ம் தேதியன்று மர்மமான முறையில் காணாமல் போனார். இது பற்றி அல்லாபிச்சை போலீசில் புகார். வழக்கு பதிவு செய்துவிசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |
| 345. | 24.05.09 | **மதுரை மாவட்டம்:** மதிச்சியத்தை சேர்ந்த பழனிவேல் மகள் அனிதா அண்ணாநகரில் துணிகளுக்கு எம்ராய்டு போடும் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். கம்பெனியில் வேலை பார்க்கும் செல்லப்பாண்டிக்கு காதல் ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த 09.05.09 அன்று வேலைக்கு சென்ற அனிதா வீடு திரும்பவில்லை. இது பற்றி பழனிவேல் போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினத்தந்தி |
| 346. | 24.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** சிவகிரி தாலுகா, தென்மலையைச் சேர்ந்த பெண் தனியார் ஆலையில் வேலை பார்க்கும் பெண்ணிடம் பஞ்சாயத்து தலைவர் பாலியல் பலாத்காரம் முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை. | கணேசன், RMA |
| 347. | 24.05.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் மீனாட்சி நகரைச் சேர்ந்த ராம்ராஜ் மகள் தேவிகுமாரி. தேவிகுமாரிக்கும், வில்லாபுரத்தைச் சேர்ந்த பிரபுவுக்கும் கடந்த 22.05.08ல் திருமணம் நடந்துள்ளது. இந்நிலையில் பிரபு மற்றும் குடும்பத்தார் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். இதனால் தேவி தாய் வீட்டிற்கு | பெண்கள் மீதான வன்முறை. | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்று விட்டார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு. | | |
| 348. | 24.05.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் தாலுகா மக்கள் திருவள்ளூர் நகர் ரேசன் கடையில் ஒரு பகுதி மக்களுக்கு மட்டும் துர்நாற்றம் கொண்ட தரமற்ற அரிசியை விநியோகம் செய்தனர். இதை எதிர்த்து முற்றுகை போராட்டம் நடத்தினர். | | |
| 349. | 24.05.09 | **சென்னை மாவட்டம்:** திரு.வி.க நகரைச் சேர்ந்த முகமது சாதிக்கின் மகள் நசீர் பாத்திமாவை அப்பகுதியைச் சேர்ந்த கணேசன் என்பவரின் தாய் சகோதரி மற்றும் சகோதரியின் கணவர் குமார் கடத்தி சென்று விட்டதாக போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |
| 350. | 24.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** களக்காடு அருகே இளையர்குளத்தைச் சேர்ந்த துரைராஜ் மகன் வேம்புவேல் மனைவி ராஜகுமாரியிடம் அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் வரதட்சணைக் கேட்டு அடித்து சித்ரவதை செய்தனர். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தீக்கதிர் |
| 351. | 24.05.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கடைக்–கோடியிலுள்ள 20 கிராம மக்கள் கீழ்ப்பாக்கம் சுற்றியுள்ள கிராம மக்களால் புகார் கொடுக்க முடியவில்லை. காவல் நிலையத்திற்கு மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை. உயர் காவலர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். காவல் நிலையம் இருந்து பொது மக்கள் புகார் அளிக்க முடியாத நிலை. | காவல் நிலையச் சித்ரவதை | நக்கீரன் |
| 352. | 25.05.09 | **சென்னை மாவட்டம்:** ரயில்வே பாதுகாப்பு படையினருக்கும் மற்றும் ரயில்வே போலீசாருக்கும் தெரியாமல் சென்னையில் இருந்து ஆந்திராவுக்கு ரயில்களில் ரேஷன் அரிசி கடத்தப்படுகின்றன . இது பற்றி பொது மக்கள் புகார். | ரேசன் அரிசி கடத்தல். | தினமலர் |
| 353. | 25.05.09 | **சென்னை மாவட்டம்:** சட்டக்கல்லூரி மாணவி பஸ்சில் பயணம் செய்து கொண்டிருந்த போது அப்பகுதியைச் சேர்ந்த போலீஸ்காரர் மாணவியை கட்டிப்பிடித்து மானபங்கம் செய்ய் முயற்சித்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தினத்தந்தி |
| 354. | 25.05.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** கரிமேடு, பரிசுத்தம் நகரைச் சேர்ந்த ஆப்ரஹாம் சீலா. ராஜா மிராசுதார் மருத்துவமனையில் பிரசவத்திற்கு சேர்க்கப்பட்ட சீலா. மருத்துவர் அலட்சியத்தால் இறந்துள்ளார். இது பற்றி ஆப்ரஹாம் போலீசில் புகார் கொடுத்துள்ளார். ஆனால் காவலர்கள், மருத்துவரும் துணைபோவதாகவும் அதனால் | மருத்துவர் அலட்சியம் | தீக்தகிர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழக்கை குற்றப் புலனாய்வு பிரிவுக்கு மாற்ற வேண்டும் என்று ஆப்ரஹாம் அரசிற்கு கோரிக்கை வைத்துள்ளார். | | |
| 355. | 26.05.09 | **தேனி மாவட்டம்:** அல்லிநகரைச் சேர்ந்த கருப்பையா மகள் செல்வமாரி. செல்வமாரி இரண்டாவது முறையாக பிரசவத்திற்கு தேனி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது மஞ்சள் காமாலை நோய் இருப்பதாக கூறி மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி டாக்டர்கள் மதுரைக்கு கொண்டு செல்லுமாறு கூறிவிட்டனர். இதனால் அலைக்கழிக்கப்பு செய்யப்பட்ட செல்வகுமாரிக்கு மதுரை செல்லும் வழியில் ஆம்புலன்சில் குழந்தை பிறந்தது. இது பற்றி உறவினர்கள் புகார். | மருத்துவர் அலட்சியம் | தினமலர் |
| 356. | 26.05.09 | **சேலம் மாவட்டம்:** சூரமங்கலம் அருகேயுள்ள நெடுஞ்சாலைநகரில் தேசிய நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய சோதனையில் கணக்கில் வராத எட்டு லட்சத்தி 8 ஆயிரத்து 200 ரூபாய் பணம் கைப்பற்றப்பட்டது. | லஞ்சம் | தினமலர் |
| 357. | 26.05.09 | **திருப்பூர் மாவட்டம்:** அவினாசி அடுத்த சாவக் கட்டுப்பாளையத்தைச் சேர்ந்த பொன்னுசாமி மனைவி ஜெயந்தி இருவருக்கும் 4வதாக பிறந்த ஆண் குழந்தையை வறுமை காரணமாக வளர்க்க முடியாது என கூறி அப்பகுதியைச் சேர்ந்த நிஷாவிடம் ரூ. 27 ஆயிரம் பெற்றுக் கொண்டு குழந்தையை விற்று உள்ளனர். இது பற்றி போலீசார் விசாரணை. | ஆண் சிசு | தினமலர் |
| 358. | 26.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** நாங்குநேரி தாலுகா, காரியாண்டி தெற்கு தெருவைச் சேர்ந்த சின்னத்துரை மகள் முத்துப்பேச்சி. அப்பகுதியைச் சேர்ந்த மணிகண்டனை காதலித்து திருமணம் செய்து கொண்டார்டி. இந்நிலையில் முத்துப்பேச்சி மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது பற்றி சின்னத்துரை போலீசில் புகார் செய்துள்ளார். ஆனால் போலீசார் சரியான முறையில் விசாரிக்கப்பட்டதால் சி.பி.சி.ஐ மாற்றக்கோரி சின்னத்துரை நீதிமன்றத்தில் வழக்கு. | பெண்கள் மீதான வன்முறை. | தினத்தந்தி |
| 359. | 26.05.09 | **நாமக்கல் மாவட்டம்:** குழந்தைத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட தையல் பயிற்சி உதவித் தொகை கையாடல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர் நாமக்கல் ஆட்சியரிடம் முறையிட்டார். | பணம் கையாடல் | தமிழ்ஓசை |
| 360. | 26.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** பாளையங்–கோட்டை நேசநியினார் மனைவி கலையரசியை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் | பெண்கள் மீதான வன்முறை. | தமிர்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிக வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். இது பற்றி போலீசில் புகார். | | |
| 361. | 26.05.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** தொடரும் மணல் திருட்டால் சின்னாளப்பட்டி அருகே பல கிராமங்களில் நீர் வளம் குறைந்து கொண்டே வருகிறது. இது பற்றி அப்பகுதி மக்கள் புகார். | மணல் திருட்டு | தமிழ்சுடர் |
| 362. | 26.05.09 | **திருச்சி மாவட்டம்:** நாவல்பட்டு அருகேயுள்ள குண்டூரைச் சேர்ந்த லோகேஸ்வரி. +2 படித்து தேர்வெழுதிவிட்டு இருந்த மாணவி லோகேஸ்வரி சக மாணவரான கார்த்திகுடன் பழகி வந்தார். இதை பெற்றோர் கண்டித்துள்ளனர். இதனால் இருவரும் வீட்டை விட்டு வெளியேறினர். இந்நிலையில் லோகேஸ்வரி கர்ப்பமுற்றார். இதனால் திருமணம் செய்து கொள்ளும்படி கார்த்திக்கை வற்புறுத்தியுள்ளார். இதனால் லோகேஸ்வரியை கார்த்திக் கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தினமலர் |
| 363. | 26.05.09 | **தேனி மாவட்டம்:** தேனி தாலுகா நாகலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த அருந்ததியர் மக்கள். அருந்ததியர் சமூகத்திற்கு ஒதுக்கப்பட்ட மயான பாதயை தனியார் பாரதி வித்யாமந்திர் எனும் கல்வி நிறுவனத்தினர் வேலி போட்டு அடைத்துள்ளனர். இதனால் அம்மக்கள் நடந்து செல்ல முடியாத நிலை. இது பற்றி அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றும் நில அளவை அளந்து சர்வேல கல் நட்ட பின்பும் ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை. இந்நிலையில் அப்பகுதியில் ஒரு இறந்துள்ளார். இதனால் பதற்றமான சூழ்நிலை. போலீசார் குவிப்பு. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 364. | 27.05.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவிலை சேர்ந்த குழந்தைவேலு மகள் சுதா (15) சுதாவும் நெல்லையைச் லாரி டிரைவரான முத்துக்குடியும் காதலித்துள்ளனர். இதற்கு சுதாவின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்நிலையில் சுதா பள்ளி விடுமுறையில் தனது உறவுகாரர் வீட்டில் மதுரையில் தங்கியுள்ளார். இந்நிலையில் மதுரையில் தங்கியிருந்த சுதாவை காணவில்லை. போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினமலர் |
| 365. | 27.05.09 | **சென்னை மாவட்டம்:** டி.பி. சத்திரத்தை சேர்ந்த ஜோசப் வீட்டிற்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பை பெற செனாய் நகர் மாநகராட்சி குடிநீர் வாரிய இன்ஜினியர் ஏழுமலையிடம் அணுகியுள்ளார். இதற்கு ஏழுமலை ரூ. 4000 லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி ஜோசப் போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | லஞ்ச ஊழல் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 366. | 27.05.09 | **திருச்சி மாவட்டம்:** திருவெறும்பூர் அருகே உள்ள காட்டூர் அம்மன் நகரைச் சேர்ந்த ஞானசேகரன் மனைவி பாக்கியஷீலா. ஞானசேகரன் தொழில் முன்னேற்றத்திற்காக அரியமங்களத்தைச் சேர்ந்த நெப்போலியன் மற்றும் ஜான் கென்னடியிடம் ரூ. 16 லட்சம் பெற்றுள்ளார். இந்நிலையில் இவர் வட்டி கட்டி வந்துள்ளார். இந்நிலையில் இவருக்கு கொடுத்த அசல் பணத்தை கேட்டுள்ளனர். இதில் ஞானசேகரன் 10 லட்சம் கொடுத்துள்ளார். மீதமுள்ள 6 லட்சத்தை 3 மாதங்களில் கட்டுவதாக கூறியவர் 3 மாதஙகள் ஆகியும் கட்டவில்லை. இதனால் நெப்போலியன் மற்றும் ஜான்கென்னடி ஞானசேகரனை தாக்கிவிட்டு பாக்கியஷீலாவை கடத்திச் சென்று விட்டனர். | பெண்கள் மீதான வன்முறை. கந்துவட்டி | தினத்தந்தி |
| 367. | 27.05.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செங்கல்பட்டு அருகேயுள்ள மேலமையூர் கிராமத்தைச் சேர்ந்த நடராஜன் தனது வீட்டுக்கு மின் இணைப்பு பெற முயற்சி செய்தார். இதற்காக செங்கல்பட்டு மின் வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். இதற்கு மின் வாரிய அலுவலக வணிக உதவியாளராக பணியாற்றி வந்த சரவணன் ரூ. 2000 லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி நடராஜன் போலீசில் புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 368. | 27.05.09 | **கோவை மாவட்டம்:** தலத் மக்கள் மீது பல்வேறு பகுதிகளில் நடைபெறும் வன்கொடுமைகளை கண்டித்து உரிய நடவடிக்கை எடுக்க கோரியும் கோவை இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். | கண்டன ஆர்பாட்டம் | தீக்கதிர் |
| 369. | 27.05.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** தெர்மல்நகர் முத்துநகரைச் சேர்ந்த பேச்சிமுத்து மனைவி கண்ணம்மாள். தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் ஒப்பந்த தொழிலாளராக வேலை பார்த்து வந்தார். ஒப்பந்தக்காரர்கள் கொடுத்த தொல்லை காரணமாக கண்ணம்மாள் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தீக்கதிர் |
| 370. | 27.05.09 | **மதுரை மாவட்டம்:** மனித உரிமைகள் மேம்பாட்டு கழக மதுரை மாவட்ட தலைவர் பழனிச்சாமி. உசிலம்பட்டி கோயில் திருவிழா மரியாதை தொடர்பான பிரச்சனையால் மதுரை மற்றும் தேனி மாவட்டத்தில் மோதல் ஏற்படாமல் தடுக்க உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்துள்ளனர். | காவல் நிலைய வன்முறை | தினகரன் |
| 371. | 27.05.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** பர்கூரை சேர்ந்த பெரியசாமி டெல்லியில் சி.ஆர்.பி.எம் போலீசாக வேலை பார்த்து வருகிறார். இவர் விடுமுறையில் சொந்த வீட்டிற்கு வந்துள்ளார். இந்நிலையில் | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வீட்டில் மின்சார இணைப்பு இல்லை என்று கூறி தாயை கட்டையால் தாக்கியுள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 372. | 27.05.09 | **மதுரை மாவட்டம்:** வில்லாபுரத்தைச் சேர்ந்த மணிகண்டன் மனைவி கலைச்செல்வியை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். மேலும் கலைச்செல்வியின் கர்ப்பத்தை கருத்தடை மாத்திரை கொடுத்து வலுக்கட்டாயமாக கலைத்துள்ளனர். | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |
| 373. | 27.05.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் கொட்டாம்பட்டியைச் சேர்ந்த இளநீர் வியாபார பெண்ணிடம் லாரி டிரைவர் கதிரேசன் பாலியல் தொந்தரவு செய்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தினமணி |
| 374. | 27.05.09 | **மதுரை மாவட்டம்:** வியாசர்பாடி சர்மாநகர் 11வது தெருவைச் சேர்ந்த சீதா மகன் பிரபு. எதிர் வீட்டில் உள்ள கோவிந்தராசு தனக்கு சொந்தமான வண்டியை பிரபு வீட்டு முன்பு நிறுத்துவது வழக்கம். இந்நிலையில் சம்பவத்தன்று வண்டியின் பேட்டரி காணவில்லை. இது தொடர்பாக கோவிந்தராஜ் பிரபுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக கீதா கோவிந்தராசை தட்டிக் கேட்கவில்லை. இதனால் பிரவு கீதாவை திட்டியுள்ளார். இதனால் மனமுடைந்த கீதா மண்ணெணைய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |
| 375. | 27.05.09 | **சென்னை மாவட்டம்:** விபத்தில் சிக்கிய சரக்குகளை விடுவிப்பதற்கு ரூ. 2 ஆயிரம் லஞ்சம் கேட்ட பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு ஆய்வாளர்கள் மீது புகார். | லஞ்ச ஊழல் | தமிர்ஓசை |
| 376. | 27.05.09 | **சென்னை மாவட்டம்:** புளியந்தோப்பு கன்னிகாபுரத்தைச் சேர்ந்த சசி பிரேம் மனைவி செண்பகவள்ளி. இருவருக்கும் திருமணமாகி 2 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாததால். கணவர் கிண்டல் செய்துள்ளார். இதனால் மனமுடைந்த செண்பகவள்ளி தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிர்ஓசை |
| 377. | 27.05.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் கொட்டக்குடி தலித் மக்கள் அப்பகுதியில் உள்ள கோயில் பகுதியில் கொடி நடுவது சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனையில் தலித் சமூகத்தைச் சேர்ந்த 8 பேர் தாக்கப்பட்டுள்ளனர். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | தலித்துகள் மீதான வன்முறை | இந்தியன் எக்ஸ்பிரஸ் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 378. | 28.05.09 | **மதுரை மாவட்டம்:** ஜெய்ஹிந்த்புரம் என்.எஸ்.கே நகர் பகுதியைச் சேர்ந்த குமரகுரு மகள் தமிழரசி. தமிழரசிக்கும் அப்பகுதியைச் சேர்ந்த டிரைவர்அன்பு பாக்கியராஜுக்கு ஓராண்டுக்கு முன்பு திருமணம் செய்து வைத்தனர். இந்நிலையில் அன்பு சொந்தமாக கார் வாங்குவதற்காக ரூ. 2 லட்சம் கேட்டு தமிழரசியை கொடுமைப்படுத்தியுள்ளார். இது பற்றி தமிழரசி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தினமணி |
| 379. | 28.05.09 | **வேலூர் மாவட்டம்:** ஆம்பூர் பெரியவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த பி.ஏ.இஜெட் தோல் தொழிற்சாலையைச் சேர்ந்த மோகன், தாஸ், ஜெயபால். மூவரும் கழிவுநீர் குழாயில் ஏற்பட்ட விஷவாயு கசிவால் இறந்தனர். | விஷவாயு | தினமணி |
| 380. | 28.05.09 | **சேலம் மாவட்டம்:** ஆறகனூர் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி மாணவி புவனேஸ்வரி. 9ம் வகுப்பு படிக்கும் புவனேஸ்வரியை அவரது பெற்றோர்கள் கட்டாய திருமணம் செய்ய முயற்சி செய்துள்ளனர். இது பற்றி புவனேஸ்வரி கலெக்டரிடம் மனு. | குழந்தை திருமணம் | தினத்தந்தி |
| 381. | 28.05.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** சுசீந்திரம் அருகே உத்தன்குடியைச் சேர்ந்த கணேசன்– மனைவி அன்னக்கிளி மகன் இராசேசு பெயரில் மோதல் தொடர்பாக வழக்கு உள்ளநிலையில் சுசீந்திரம் காவல் நிலையத்திற்கு கைது செய்வதற்காக இவரது வீட்டிற்கு இரவு சென்றுள்ளனர். இராசேசுவின் தாயார் அன்னக்கிளிக்கும் போலீசாருக்கும் தகராறு வந்துள்ளர். இந்நிலையில் அன்னக்கிளியை போலீசார் கடுமையாக தாக்கியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த அவ்வூர் மக்கள் காவல்நிலையத்தை முற்றுகையிட்டனர். | காவல் நிலையச் சித்ரவதை. | தமிழ்ஓசை |
| 382. | 28.05.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** திருவையாறு அருகே மணல் கடத்திய சரக்குந்துகளை வட்டாட்சியர் பறிமுதல் செய்தார். | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |
| 383. | 28.05.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** மூலக் கொத்தலத்தைச் சேர்ந்த மதன்குமார் மனைவி சாந்தகுமாரியின் கணவர் மதன்குமார் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளார். இது பற்றி மதன்குமார் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |
| 384. | 29.05.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் விஸ்வநாததாஸ் தெருவைச் சேர்ந்தவர் கயல்விழி. ஆசிரியையான கயல்விழியை அப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் தீன், நிஜாமுதீன், கர்ணா, கார்த்திக் ஆகியோர் கடத்த முயற்சித்துள்ளர். கயல்விழி கொடுத்த புகாரின் போரில் போலீசார் மாணவர்களை கடத்தினார்கள். இதனால் சட்டக் கல்லூரி, | பெண்கள் மீதான வன்முறை. | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதுரை காமராஜா பல்கலைக்கழகம், அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். | | |
| 385. | 29.05.09 | **ஈரோடு மாவட்டம்:** பி.பி அக்ரஹாரம் நரிப்பள்ளம், பகுதியில் தோல் தொழிற்சாலை தொழிலாளர்கள் கழிவு நீர் சுத்தகரிக்கும் போது விஷவாயு தாக்கி 3 தொழிலாளர்கள் இறந்துள்ளனர். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | விஷவாயு தாக்குதல் | தினத்தந்தி |
| 386. | 29.05.09 | **மதுரை மாவட்டம்:** சாத்தங்குடியைச் சேர்ந்த பால்பாண்டி மனைவி ரூத்கன்மணி இவருக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் ஆத்திரமடைந்த பால்பாண்டி ரூத்கண்மணியை அடித்துள்ளார். மேலும் மாமியாரையும் தாக்கியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |
| 387. | 29.05.09 | **விருதுநகர் மாவட்டம்:** வெள்ளூரைச் சேர்ந்த உமாவை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். இது பற்றி உமா போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |
| 388. | 29.05.09 | **ஈரோடு மாவட்டம்:** கோபிசெட்டிப்பாளையம் அருகேயுள்ள புஞ்சைபுளியம்பட்டியைச் சேர்ந்த குமார் மனைவி செல்விக்கும், குமாருக்கும் திருமணம் ஆகி 4 ஆண்டுகளில் செல்வியை அதிக வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். இது பற்றி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |
| 389. | 29.05.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** தாழம்பூர் அடுத்த கீழக் கோட்டையூர் பகுதியைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் மனைவி இந்துமதி. இருவருக்கும் சில மாதங்களுக்கு முன் திருமணம் நடந்துள்ளது. இந்நிலையில் குடும்ப சிக்கல் காரணமாக இந்துமதி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |
| 390. | 29.05.09 | **சென்னை மாவட்டம்:** திருவொற்றியூர் அடுத்த சாத்தாங்காடு பாலகிருஷ்ணன் நகரில் வசிக்கும் சுதாகர் மனைவி சசிலா. பேருந்து ஓட்டுனரான சுதாகருக்கு குடிப்பழக்கம் இருந்துள்ளது. இதனால் கணவர் மனைவிக்கிடையே அடிக்கடி தகராறு ஏற்படுவதுண்டு. இந்நிலையில் சம்பவத்தன்று ஏற்பட்ட பிரச்சனையில் மனமுடைந்த சுசிலா மண்ணெணைய் ஊற்றி தீ வைத்து கொண்டார். அவரை காப்பற்ற சென்ற சுதாகரும் உடல் கருகி உயிரிழந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 391. | **29.05.09** | **நாமக்கல் மாவட்டம்:** திருச்செங்கோடு வட்டம் மல்லசமுத்திரம் ஊராட்சி தலித் மக்களுக்கு ரேஷன் அரிசி கடைக்கு உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் தரமற்ற அரிசிகளை தலித் மக்களுக்கு வழங்கப்படுவதாக புகார். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 392. | **39.05.09** | **மதுரை மாவட்டம்:** பெத்தானியாபுரம், அண்ணா மெயின் விதி ஜீவா நகரைச் சேர்ந்த ஞானவேல் மனைவி பாண்டிச்செல்விக்கும் குடும்ப செலவுக்கு பணம் கேட்பது தொடர்பாக இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதனால் மனமுடைந்த பாண்டிச்செல்வி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினமணி |
| 393. | **39.05.09** | **சிவகங்கை மாவட்டம்:** திருப்பத்தூர் அருகே வி.புதுரைச் சேர்ந்த முத்துச்சாமி பேத்தி ரேவதி 11ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் தனது தோழிக்கு புத்தகம் கொடுக்க சென்றவர் வீடு திரும்பவில்லை. இது பற்றி போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இது பற்றி முத்துச்சாமி கோர்ட்டில் மனுதாக்கல் செய்துள்ளார். | சிறுமி மாயம் | தினகரன் |
| 394. | **39.05.09** | **மதுரை மாவட்டம்:** அனுப்பானடியைச் சேர்ந்த கனிமொழியை புதுக்கோட்டையச் சேர்ந்த ராஜா காதலித்து திருமணம் செய்து கொண்டார். திருமணத்தின் போது நகை, பணம் மற்றும் ஏராளமான சீர்வரிசைகள் கொடுத்துள்ளனர். இந்நிலையில் கனிமொழியிடம் மீண்டும் நகை, பணம் கேட்டு ராஜா தனது குடும்பத்தினர் துணையுடன் அடித்து துன்புறுத்தியுள்ளார். இது பற்றி கனிமொழி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |
| 395. | **39.05.09** | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் அருகே உள்ள தென்கரையை சேர்ந்த சிதரம்பரம் மகள் திவ்யா. தனியார் கல்லூரியில் 3ம் ஆண்டு படித்து வரும் திவ்யாவை அப்பகுதியைச் சேர்ந்த சலீம், செந்தில் உட்பட 8 பேர் வலுக்கட்டாயமாக கடத்தி சென்றுள்ளனர். இது பற்றி சிதம்பரம் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |
| 396. | **39.05.09** | **மதுரை மாவட்டம்:** ஆறாவது பட்டாலியனில் ஏட்டாக இருக்கும் கிருஷ்ணன் மகள் கவிதா. ஆயுதப்படையில் போலீஸ்காரராக உள்ளார். இவர் கடந்த 23.05.09 அன்று நண்பர் ஒருவரது திருமணமத்திற்கு சென்றவர் வீடு திரும்பவில்லை. இது பற்றி கிருஷ்ணன் போலீசில் புகார். வழக்கு பதிவு. | பெண்கள் மீதான வன்முறை. | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 397. | 39.05.09 | **கோவை மாவட்டம்:** வரதராஜபுரத்தைச் சேர்ந்த முபாரக் மனைவி ஆயிஷா பானு. குழந்தைகள் சபிபுல்லா (14), சாஜிதா பானு (12). முபாரக் தொழில் முடக்கம் காரணமாக 2 வருடமாக வேலைக்கு செல்லாமல் இருந்துள்ளார். இவரது மனைவி தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். இவரது வருமானத்தில் குடும்பம் நடத்தப்படடது. இருப்பினும் வாங்கிய கடன்கள் அடைக்க முடியவல்லை. இதனால் கடன்காரர்கள் முபாரக்கை மிரட்டி வந்தனர். இதனால் மனமுடைந்த முபாரக் தனது குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டார். | கடன் தொல்லை | தினமலர் |
| 398. | 39.05.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செங்கம் கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த இராமமூர்த்தி மனைவி உத்தரவள்ளி. இரண்டு ஆண்டுகளுக்கு முன் இருவருக்கும் திருமணம் நடந்தது. குழந்தை இல்லாத காரணத்தால் உத்தரவள்ளி தீ குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிர்ஓசை |
| 399. | 39.05.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சமூக விரோதிகள் பயன்படுத்தும் மது அருந்தும் இடமாக மாறியுள்ளது. இது குறித்து பொது மக்கள் முறையீட்டுக்கும் நடவடிக்கை எடுக்காமல் காவல்துறையினிர் மெத்தனம் காட்டி வருகின்றனர். | பள்ளி வன்முறை | தமிர்ஓசை |
| 400. | 39.05.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஆயுதப்படை காவலராக பணியாற்றும் நாராயணசாமி மனைவி சக்தி கோடை விடுமுறைக்காக தனது தாயார் வீட்டிற்கு சென்றிருந்தார். நாராயணசாமி தனது தாயாருடன் சக்தி வீட்டிற்கு சென்றுள்ளார். சக்தி வீட்டில் இல்லை. வீட்டு கதவை தட்டிய நாராயணசாமி கதவை தட்டியுள்ளார். யாரும் திறக்காதால் கதவை உடைத்துள்ளார். இதை தட்டிக் கேட்ட சக்தி உறவினர் வெங்கடேசை சரமாரியாக கத்தியால் குத்தியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிர்ஓசை |
| 401. | 31.05.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்தூர் அருகே அன்னசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த போரம்மாள் மகள் முத்துலட்சுமி. இருவரும் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வந்தனர். இந்நிலையில் போரம்மாள் நோய்வாய்ப்பட்டு வேலைக்கு செல்வதில்லை. இதனால் குடும்பம் நடத்த முடியாமல் கஷ்டப்பட்டு வந்ததினால் இருவரும் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டனர். இது பற்றி போலீசார் | வறுமை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 402. | 31.05.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம்– சோழவந்தான் ரோடு பகுதியில் குடியிருப்பவர் மாரிசாமி மனைவி ஜெயா. மாரிச்சாமி போலீஸ் ஆயுதப்படையில் போலீஸ்காரராக உள்ளார். இவர் அடிக்கடி குடித்துவிட்டு வந்து மனைவியை அடித்து துன்புறுத்துவார். இந்நிலையில் சம்பவத்தன்று குடிபோதையில் வந்தவர் மனைவியை குழந்தையுடன் வீட்டை விட்டு வெளியேறுமாறு அடித்து துன்புறுத்தியுள்ளார். இதுபற்றி ஜெயா போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. | தினத்தந்தி |
| 403. | 31.05.09 | **சேலம் மாவட்டம்:** அம்மாபேட்டை, பட்டைக்– கோவில் அருகில் உள்ள கிருஷ்ணன் கோவில் சந்து பகுதியில் வசித்து வரும் மருதவள்ளி பிள்ளைகள் ரம்யா (16) பிரகா= (11). மருதவல்லியின் கணவர் கணேசன் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார். இதனால் மருதவள்ளி தட்டுவடை வியாபாரம் செய்து வந்துள்ளார். தன் தாய்மாமன் மகன் ராஜாவுடன் இரண்டு வருடமாக குடும்பம் நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் சம்பவத்தன்று 4 பேரும் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டனர். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தினமலர் |
| 404. | 31.05.09 | **திருவாரூர் மாவட்டம்:** சேகரை அம்பலக்காரத் தெருவைச் சேர்ந்த பாலையன் மகள் கனிமொழி (20) கனிமொழியை மேற்படிப்பு படிக்க பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் மனமுடைந்த கனிமொழி மண்ணெய் ஊற்றி தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. | தமிழ்ஓசை |
| 405. | 31.05.09 | **கோவை மாவட்டம்:** துடியலூர் செங்காணிபாளையத்தைச் சேர்ந்த சிறுமியை அப்பகுதியைச் சேர்ந்த இராமசாமி (55) என்பவர் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | சிறுமி பாலியல் வன்முறை | தமிழ்ஓசை |
| 406. | 31.05.09 | **மதுரை மாவட்டம்:** மதிச்சியம் போலீஸ் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் வேலை பார்க்கும் பிரபாகரன் தம்பி உள்ளிட்டோருடன் பீ..பீகுளம் பகுதிக்கு சென்று அங்கிருந்த தனியார் நிறுவனத்தில் தகராறில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. போதையில் வந்த போலீஸ்காரர் பிரபாகரனை நிறுவனத்திலிருந்து பெண்ணை மிரட்டியதுடம் நிறுவனத்தையும் தாக்கி கண்ணாடிகளை உடைத்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். | காவல் நிலையச் சித்ரவதை | தினமணி |